*eISSN: 2456-5148*
*Vol. 4 Issue: 04 November 2025*
https://doi.org/10.63300/kirjts

# Lifestyle in the Pommai Manithargal Short Story Collection

**Dr. B. Periyaswamy,**
Assistant Professor, Department of Tamil, Dr. MGR Chockalingam Arts College, Arni, Thiruvannmalai – 632317, Tamil Nadu, India,
EMail: periyaswamydeva@gmail.com, ORCID: https://orcid.org/0000-0002-7395-9699.

**Abstract:**

In his collection of short stories titled Mukhilai Rajapandian's Bommai Manithargal, it was found that education is the basis of one's development, it develops virtues and gives a higher quality of giving up. Also, the dowry given at the time of marriage will lead to poverty in the girl's house, so there should be no dowry. The article has revealed that alcohol and smoke destroy the family, husband and wife affection in the family relationship, and that third party interference can lead to suspicion in the family and hence there should be no third-party interference.

**Keywords**: *Bommai Manithargal, Mukhilai Rajapandian, Lifestyle, Marriage, Education, Husband and Wife Relationship.*

**References**

1. Ragavan. A, Pennurimaiyum madhamum, dravidar Kazhaga Veliyedu, Chennai, 2001.
2. Kannadasan, Arthamulla indhumadham, kannadasan pathipagam, Chennai,2019.
3. Sundhara Shamuganar (Urai), Naladiyar, Gowra Pathipagam, Chennai, 2021.
4. Dhivyabharath, R. "Arailakkiyathil illara mathipugal." Pandian Journal of Womens Studies, Vol.3, Iss.1, May 2023, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7997879.
5. Panjangam, Ka. Pen – Mozhi – Padaippu. Kaviya, Chennai, 2007.
6. Bharathidasan, Kudumba Vilakku, Manivasagar Pathipagam, Chennai, 2002.
7. Prema, R. Penviduthaiyum Pennurimyum, Arivu Pathipagam, Chennai, 2008.
8. Pudhuvai Ganakumaran. Penniya Nokkil Melanmai Ponnusamiin Pudhinangal. Sinthanai Pathipagam, Pudhuchery, 2007.
9. Puliyur Kesikan (ed.), Thirukkural Parimelazhagar Urai, Poompuhar Pathipagam, Chennai, 1986.
10. Ponmani Vairamuthu, Vairamuthu Kavithaigal, Surya Publications, Chennai, 2002.
11. Mukhilai Rajapandian, Bommai Manithargal, Kovan Pathipagam, Chennai, 2007.
12. Varadharajan, M. Agalvilakku. Pari Nilaiyam, Chennai, 1995.
13. Varadharajan, M. Kallo? Kaviyamo?. Pari Nilyam, Chennai, 1995.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

KALANJIYAM

# பொம்மை மனிதர்கள் சிறுகதை தொகுப்பில் வாழ்வியல்

**முனைவர்பீ. பெரியசாமி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர்எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,

ஆரணி, திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு, இந்தியா,

மின்னஞ்சல்: periyaswamydeva@gmail.com, ORCID: https://orcid.org/0000-0002-7395-9699

**ஆய்வுச் சுருக்கம்:**

முகிலை இராசபாண்டியன் பொம்மை மனிதர்கள் எனும் சிறுகதை தொகுப்பில் வழி வாழ்வியல் செய்திகளை கல்வி என்பது ஒருவரின் வளர்ச்சி அடிப்படை, அது நற்பண்புகளை வளர்க்கும், விட்டுக்கொடுக்கும் உயர்ந்த பண்பை கொடுக்கும் என்பது அறியப்பட்டது. மேலும், திருமணத்தின் போது கொடுக்கப்படும் வரதட்சணை அந்த பெண் வீட்டை வறுமைக்குள் கொண்டு செல்லும் எனவே வரதட்சனை கூடாது.குடும்ப வறுமையில் மனைவி தோளோடு தோள் நிற்கிறாள். மதுவும் புகையும் குடும்பத்தை அழிக்கும், குடும்ப உறவில் கணவன் மனைவி பாசம் குடும்ப பிணைப்பை ஏற்படுத்துகின்றது, மூன்றாம் நபர் தலையீட்டால் குடும்பத்தில் சந்தேகம் ஏற்படும் சிக்கல் விளையும் எனவே மூன்றாம் நபர் தலையீடு கூடாது ஆகியவற்றை இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

***திறவுச்சொற்கள்:*** பொம்மை மனிதர்கள், முகிலை இராசபாண்டியன், வாழ்வியல், திருமணம், கல்வி, கணவன் மனைவி உறவு.

## முன்னுரை

முகிலை இராசபாண்டியன் பொம்மை மனிதர்கள் எனும் சிறுகதை தொகுப்பில் வழி வாழ்வியல் செய்திகளை இக்கட்டுரை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. அதனடிப்படையில் குடும்g வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள் தனி மனித சிக்கல்கள் என அனைத்தையும் இக்கட்டுரை ஆராய்கின்றது. படிப்பின் தேவை அதனால் உண்டாகும் குண நலன்கள், திருமணம், வரதட்சணை, கணவன் மனைவி உறவுநிலை போன்றவற்றை இக்கட்டுரை விரிவாக ஆராய்கின்றது.

## படிப்பின் தேவை

கல்வியின் அவசியத்தை நாலடியார்,

**குஞ்சி யழகும் கொடுத்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு. (நாலடி.131)**

என்கிறது. அதாவது, தலைமயிரைச் சீர்படுத்தி முடிப்பதால் வரும் அழகும், முந்தானையில் கரையிட்ட அழகும், மஞ்சள் பூசுவதால் உண்டாகும் அழகும் உண்மை அழகல்ல. மனத்தளவில் உண்மையாக நடந்துகொள்கிறோம் என்னும் நடுவு நிலையாம் ஒழுக்க வாழ்க்கையைத் தரும் கல்வி அழகே மிக உயர்ந்த அழகாம்.

அழுக்குத்துணி எனும் கதையில் பள்ளிக்கூடம் வராத மணியைப் பார்த்து ஆசிரியர் அக்கரையாக, **”ஏலே… மணி! பள்ளிக் கூடத்துக்கு வராம, என்னலே அயர்ன் துணி வாங்கிக்கிட்டு நிக்கிறே… படிக்கிற பிள்ளையைக் காலையில படிக்கச் சொல்லு… அயர்ன் துணி வாங்க அனுப்பாதேன்னு செல்லையாகிட்ட எத்தனை தடவை சொன்னாலும் அவனுக்கு மண்டையில ஏறமாட்டேங்குது…”. (பொம்மை மனிதர்கள், ப.75)** என்றார்.

நல்ல வெளுத்த துணியோடு இன்றைக்கு ஆசிரியர் பள்ளிக்கு வரச்சொல்ல வெளுத்த துணி இல்லாமல் போக. அந்த நேரத்தில் அப்பாவுக்கு துணையாக வேலை பார்க்க அம்மா சொல்லும்போது, **‘வெளுத்த துணி போட்டுட்டுத்தான் ஸ்கூலுக்குப் போவேன்’னு அடம்பிடித்தால் ஸ்கூலுக்கே போகமுடியாது என்பது மணிக்கு நன்றாகப் புரிந்தது. மூலையில் கிடந்த அழுக்கு யூனிபார்மை எடுத்துப் போட்டுக் கொண்டு பள்ளிக் கூடத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான் மணி.** (பொம்மை மனிதர்கள், ப.80) என்பதில் கல்விக்கு எப்படியெல்லாம் தடைகள் ஒரு ஏழை சிறுவனுக்கு ஏற்படுகின்றது என்பதை ஆசிரியர் ஆழமாக புரிய வைத்துவிட்டார்.

**படிப்பும் குணமும்**

கல்வியில்லா பெண்கள் களர்நிலம் என்றார் பாரதிதாசன். அந்த கல்வி பெண்களுக்கு ஏன் தேவை? என்பதை,

**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**குடித்தனம் பேணுதற்கே!**
**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**மக்களைப் பேணுதற்கே!**
**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**உலகினைப் பேணுதற்கே!**
**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**கல்வியைப் பேணுதற்கே! (குடும்பவிளக்கு, ப.48)**

என்று எடுத்துரைத்துள்ளார். இங்கு தன்னைவிட குறைவாக படித்த ஒருத்தரை திருமணம் செய்ய நினைக்கும் வசந்தியி நிலையை,

> **கங்க்ராஜீலேஷன்ஸ் வசந்தி… கடைசியா கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டே… மாப்பிள்ளை தாலுகா ஆபீஸ்ல வேலை பார்க்கிறார்னு மட்டுந்தான் கல்யாணப் பத்திரிகையில போட்டிருந்தது. என்ன படிச்சிருக்கார்னு போடல்லியே” என்று கில்டா கேட்டதும் வசந்தி அவமானத்தால் கூனிக் குறுகினாள். ”லிங்கம் எஸ்.எஸ்.எல்.சி.னு பத்திரிமையில போட்டா நல்லா இருக்காது. அதனாலதான் பத்திரிகையில போடல்லே என்று அருகில் நின்ற சியாமளா சொன்னது அவளை மேலும் அவமானப் படுத்தியது. (பொம்மை மனிதர்கள், ப.54)**

என்ற வசனங்கள் எடுத்துரைக்கின்றது. தன்னைவிட அதிகமாக படித்த பெண்ணை திருமணம் செய்யும் மாப்பிள்ளை,

> **லிங்கத்தை அவனது பிரண்ட்ஸ் சூழ்ந்து கொண்டு என்னென்னமோ சீண்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் ”என்ன லிங்கம் வாத்தியாரம்மாவைக் கல்யாணம் பண்றே… பாடமெல்லாம் இனிமே அவங்ககிட்டேயே படிக்கப் போறியா?” என்று கேலியாகக் கேட்டான். இன்னொருவன் ”அதெப்படிடா எஸ்.எஸ்.எல்.சி. படிச்ச நீ, எம்.ஏ. படிச்ச பொண்ணைப் புடிச்சே… அதிர்ஷ்டக்காரன் தான்டா…” என்றான். ”லிங்கம்… இனிமேல் உங்க வீட்டில மதுரை மீனாட்சி ஆட்சிதான் நடக்கும்னு சொல்லு” என்றான் நாகர்கோவில் தாலுகா ஆபீசில் வேலை பார்க்கும் நண்பன் ஒருவன். (பொம்மை மனிதர்கள், ப.55)**

இதுதான் இன்றை எதார்த்த சமூகம் அவர்களுக்குள் மனம் ஒத்திருந்தாலும் அவர்களை கல்வி, பணம், குலம், சாதி பெயர்களால் அவர்களிடையே வெறுப்பையும் பிரிவையும் ஏற்படுத்துவதே இவர்களின் பணி. ஆனால் இருமனம் ஒன்றிய பின் திருமணம் நடைபெறுவதே சிறப்பு. அதில் எந்த பேதமும் கூடாது.

**உயர்ந்த உள்ளம்**

இருவரும் மனம் ஒத்து வாழ்வதே வாழ்க்கை பெண் கல்வி என்பது சிறப்பு. பெண் என்பவள் ஆளுமை நிறைந்தவள். இதனை, **பெண்களுக்கு இயற்கையில் புத்திக் கூர்மையும் மனோபலமும் அபரிமிதமாக அமைந்திருக்கின்றன. பெண்ணின் சக்தியை அடக்கி நசுக்க முயன்றால் சமூகத்துக்கு அது பயன்படாமல் போகும். அந்த சக்தியை வளரவிட்டுத் தக்க சந்தர்ப்பங்களும் அளித்தால் அதனால் மனித சமூகம் ஏற்றமும் கொண்டு சிறப்படையும். (பெண் விடுதலையும் பெண்ணுரிமையும், ப.72)** என்கிறார் பிரேமா. மேலும், ”**படிச்சா மதிக்கமாட்டாங்க அப்படீங்கறது எல்லாம் அந்தக்காலம். நாம அவங்க அறிவுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுத்தா அவங்க நம்ம அன்புக்கு மரியாதை கொடுக்கப் போறாங்க. கல்யாணம்ங்கறது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில உண்டாகிற அன்புப் பிணைப்புத்தான். அறிவுப் பிணைப்பு இல்லை… இந்தப் புரிதல் படிச்ச அவங்ககிட்ட நல்லாவே இருக்கு அதனால மரியாதைங்கற பேச்சுக்கே இடம் இல்லை…” என்று லிங்கம் சொன்னது வசந்தியின் மனத்துள் புகுந்தது. (பொம்மை மனிதர்கள், ப.56)** என்று தன் புரிதலை லிங்கம் வெளிப்படுத்தியதும் அவரின் நல்லமனதைப் புரிந்துக் கொண்டாள் வந்தி. இதன்வழி கல்வி என்பது அறிவு வளர்ச்சிக்கானதே என்பது தெளிவு. இதனை உணர்ந்த வசந்தி,

> **”தான் படிச்சதால படிச்ச மாப்பிள்ளை வேணும்னு இவ்வளவு காலமும் கழித்தது எவ்வளவு பெரிய மடத்தனம்” என்று வசந்திக்குப் புரிந்தது. பட்டப்படிப்பு படிக்காத லிங்கத்திடம் இருக்கிற பண்புக்கு முன்னால் தனது பட்டங்கள் பறந்துவிடும் என்பதை உணர்ந்த வசந்தி தனது முகத்தைத் துடைத்துக்கொண்டாள். நேசத்தோடு லிங்கத்தைப் பார்த்தாள். (பொம்மை மனிதர்கள், பக். 56-57)**

லிங்கத்தின் மீது காதல் கொண்டு அவனையே மணந்து திருமணம் செய்துகொள்கிறாள்.

**திருமணம்**

பருவம் எய்திய ஆணையும் பெண்ணையும் குடும்ப உறவில் இணைக்கும் சடங்கிற்கு திருமணம் என்று பெயர். இதனை,**ஒரு ஆடவனும், ஒரு பெண்ணும் இவ்வுலக வாழ்க்கையில் ஒற்றுமையோடும் ஒருவருக்கொருவர் உதவி செய்து சமத்துவமாய் வாழ இருவரும் மன ஒருமையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தமே திருமணம் என்று வழங்கப்படுகிறது. (பெண்ணுரிமையும் மதமும், ப.9)** என்று இராகவன் கூறியுள்ளார்.

பெண்களுக்கு திருமணம் செய்து கொடுப்பதே பெற்றோர்களின் கடமை என்ற எண்ணம் இன்றுவரை நம் சமூகத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. அதிலும் இரண்டு மூன்று பெண் பிள்ளைகள் இருந்தால் மூத்தவளுக்கு சீக்கிரம் திருமணம் முடிக்க வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே பெற்றோர்களிடம் வந்துவிடுகின்றது. இதனை,

> **மூத்தவள் வசந்தியின் கல்யாணம் முடிந்தால் தான் ஒவ்வொருவருக்காகக் கல்யாணம் முடிக்க முடியும். தனது தங்கைகளின் கல்யாணத்திற்கு தான் நந்தியாக இருக்க வசந்தி விரும்பவில்லை என்பது ஒரு காரணம். (பொம்மை மனிதர்கள், ப.51)**

என்ற வசந்தியின் எண்ணத்திலிருந்து அறிந்துக்கொள்ளலாம். திருமணம் என்றாலே உட நமக்கு நியாபகத்திற்கு வருவது வரதட்சணை. இங்கு ஒரு தந்தை தன் பிள்ளையாகப் பாவித்த மாடுகளை விற்று தன் மகளுக்கு சீர் செய்கிறார். அதனை, **துண்டைக் கையில் வைத்து மற்றவனிடம் இரகசியமாக விலை பேசிக் கொண்டிருந்த தரகனிடம் "இதோ பாரு... ஒளிச்சு மறைக்கிறதுக்கு நான் ஒண்ணும் கள்ள மாட்டைக் கொண்டுவரலை... உள்ள விலையைச் சொல்லு... கட்டும்னா... கொடுக்கிறேன்... இல்லேன்னா... இல்லைன்னு சொல்றேன்" என்று வெட்டு ஒன்று துண்டு ரெண்டாகப் பேசி பத்தாயிரத்து ஐந்நூறுக்கு இரண்டு மாடுகளையும் விற்றார். (பொம்மை மனிதர்கள், ப.148)** என்பதன்வழி அறிய முடிகின்றது. இந்த அவலநிலையினைத், **தமிழ்நாட்டிலே இதுகாலை யாண்டும் நகையைப் பற்றிய பேச்சாகவே இருக்கிறது. எத்தகைய திருமணப் பேச்சிலும் முதலாவதாகக் கேட்கப்படுகிறது. நகை எவ்வளவு என்பதே. பெண் நகைக்காக விரும்பப்படுகின்றாளே யொழிய அவள் குணம் நடை அறிவு அழகு முதலியவற்றிற்கு மணம் நடைபெறுவது தமிழ்நாட்டிலில்லை. (பெண்ணுரிமையும் மதமும், ப. 28)** என்று இராகவன் கூறியுள்ளார்.

சீர்வரிசை செய்யாததால் வீட்டு வந்த தன் மகளின் நிலையைக் கண்டு ஒரு தாய் தன் கணவனிடம், **பொண்ணைக் கல்யாணம் பண்ணிக் குடுக்கும் போதே செய்யவேண்டிய சீர் சிறப்பை எல்லாம் சரியா செய்யணும்... அப்படிச் செய்யாம போனதால புள்ளை கலங்கி நிக்கிறா.** (பொம்மை மனிதர்கள், ப.142) என்பதன் வழி வரதட்சணையின் கோர முகத்தை நாம் உணர்ந்துக் கொள்ளலாம்.

**கணவன் – மனைவி உறவு**

இல்லறத்திற்கு இல்லாள் எவ்வளவு முக்கியம் என்பதை, **மனைவி இல்லையெனில் அது வீடு இல்லை. அதனால்தான் மனைவியை இல்லாள் எனக் குறிப்பிடுகின்றனர்** (ர. திவ்யபாரதி, ப.42)

KALANJIYAM

என்பதன்வழிஅறியலாம். என்னதான் கந்தையா குடிகாரனாக இருந்தாலும் தன் மனைவிக்கு எடல்நிலை சரியில்லை என்றவுடன், **எழுந்திரு குப்பம்மா… ரிக்ஷவில குந்து… நான் தர்மாஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போறேன்…" என்று கந்தையா சொன்னது அவள் காதுகளில் விழவில்லை. வலுக்கட்டாயமாக இழுத்து ரிக்ஷாவில் உட்காரவைத்துக் ஆஸ்பத்திரிக்குப் போனான் கந்தையா. (பொம்மை மனிதர்கள், ப.45)** என்பதில் அவனுக்கு அவன் மனைவியின் மீதிருந்த காதல் வெளிப்படுகின்றது.

அதேபோல், சூசை அடுத்த நர் பொழப்புக்கு என்ன செய்வதென்று தெரியாமல் இருக்கும்போது மேரி, **இந்தச் சிலுவையை வித்தடுங்க… நாளைக்கே மண்டைக்காட்டுக்குப் போய் மரம் வாங்கிக் கட்டுமரம் கட்டுறதுக்கு ஏற்பாடு செய்திடுங்க" என்றாள் மேரி. "ஆன்டவர் அந்தச் சிலுவையில இல்லைங்க… நம்ம மனசுல இருக்கிறார்… மனசு சுத்தமா இருந்தா எப்பவும் ஆண்டவர் நம்மோடயே இருப்பார்… நீங்க கவலைப்படாம போய் வித்துட்டு வாங்க…" என்ற மேரி அவனுக்குக் குடிசையின் கதவைத் திறந்து விட்டாள். (பொம்மை மனிதர்கள், ப.114-115)** என்று தன் கணவனை மானத்தைக் காத்து அவள் வாழ்விற்கு ஒரு வெளிச்சத்தை ஊட்டினாள். இது அவள் கணவன் மீது வைத்திருக்கும் காதலை வெளிப்படுத்துகின்றது மட்டுமல்லாமல் அவனே தோளோடு தோள் நிற்பதையும் நமக்குக் காட்டுகின்றது.

**வறுமை**

வறுமை என்பதை நல்குரவு என்பர். வறுமையில் உழல்பவர்களுக்கு அதுவே மிகப்பெரிய துன்பமாய் அமைந்துவிடுகின்றது. இதனை வள்ளுவர்,

**இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது. (குறள் - 1041)**

என்கிறார். அதாவது, ஒருவனுக்கு அவன் வாழ்வில் வறுமையைப் போலத் துன்பம் தருவது எதுவென்றால், அந்த வறுமையைப் போலத் துன்பந்தருவது, அந்த வறுமையே அன்றி, வேறேதுமில்லை என்கிறார் வள்ளுவர்.

குப்பம்மாவின் உடல்நிலை சரியில்லாமல் போய்விடுகின்றது. அப்போது அவளால் தன் மகன் படிப்புக்கு பணம் கட்ட முடியவில்லை. அப்போ குப்பம்மாவின் மகன், **"இன்னும் ஒரு வாரத்துக்குள்ள ஃபீஸ் கட்டலன்னா ஸ்கூலைவிட்டு நீக்கிடுவோம்னு சொல்றாங்கம்மா"** (பொம்மை மனிதர்கள், ப.33) என்று கூறுகின்றான். தன் மகனைப் படிக்க வைக்கதானே இத்தனை கஷ்டபடுரோம் இப்போ பணம் கட்டலைனா அவன் படிப்பு நின்றுவிடுமே என் நினைக்கும்போது, **பூமி நழுவிப் போவதுபோல் தலைசுற்றியது.** (பொம்மை மனிதர்கள், ப.34) அவள் தொடர்ந்து வேலைக்குப் போக முடியாத நிலை ஏற்படவும் சூப்பர்வைசரிடம் வாங்கி கொடுத்த பணத்தை அளிக்கவும். குப்பம்மாவின் மகன் படிப்பை நிறுத்திவிட்டு **தோல் ஃபாக்டரிக்கு வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறான்.** (பொம்மை மனிதர்கள், ப.49) இது குடும்ப வறுமையால் பிள்ளைகளின் படிப்பு எவ்வாறு இடைநிற்றலுக்கு ஆளாகின்றது என்பதை தெளிவாக எடுத்துரைக்கின்றது.

நேற்று இன்னாசி தாத்தா வாடகை கேட்டுவிட்டு சென்றது சூசைக்கு நினைவில் வந்து போனது. அவர் இப்படி கேட்டதே இல்ல சூழல் அவர் என்ன செய்வார். இன்னைக்கு எப்படியாவது தந்துவிட வேண்டும் என நினைத்துக் கொண்டே கட்டுமரத்தைக் கொண்டு கடலுக்குச் சென்றான் பெரியதாக எதுவும் அகப்படவில்லை. கரையேறியதும்,

> **“என்னலே... மீன்பாடு எப்படிலே... மூணு நாளா மரவாடகையைத் தரலை. இன்னைக்காவது தந்துடுவியா... உங்க அப்பங்காலத்திலே இருந்து மரந்தர்றதால தான் முகத்தைப் பார்க்க வேண்டிய தாயிருக்கு...” என்றார். மீன் விற்றதில் கிடைத்த பத்து ரூபாயை எடுத்துக் காட்டினான் சூசை. ”இதுதான் இன்னைக்கிக் கிடைச்சது தாத்தா. இதை உங்க கிட்டே குடுத்துட்டா வீட்டு அடுப்புல பூனைதான் தூங்கும்” என்று அவன் சொன்னதை இன்னாசி தாத்தா கேட்கவில்லை. (பொம்மை மனிதர்கள், ப.111)**

மரத்தையும் எடுத்துக்கிட்டு பணத்தையும் வாங்கிட்டுப் போயிட்டார். அவனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை.

> **சூசையும் இரண்டு வருசமாக ஒரு கட்டுமரம் செய்யவேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறான். மண்டைக்காடு பக்கத்தில் மரமும் பார்த்து வைத்திருந்தான். மரத்தை வாங்குவதற்குத்தான் பணம் இல்லை. (பொம்மை மனிதர்கள், ப.107)**

என்பது இன்றைய மீனவர் வாழ்வின் துயரினைப் படம்பிடித்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது.

**வறுமையின் அடையாளம்**

குப்பம்மாவின் கணவன் தான் வறுமையில் இருந்தாலும் அவனுக்குள் ராஜா என்ற நினைப்பு மாறாமல் இருக்க குடிக்க ஆரம்பித்தவன் இப்போதெல்லாம் குடிப்பதற்காகவே வாழ்கிறான். அதனால் குடும்பம் வறுமையில் வாடுகின்றது. மகன் படிக்க பணம் இல்லை. மனைவிக்கு உடல்சரியில்லாத நிலையிலும் வேலைக்குப் போகிறாள். சரியான உணவில்லை. வைத்தியம் பார்க்க பணமில்லை என குடும்பமே வறுமையால் வாடுகின்றது என்பதை எதிர்பார்ப்புகள் எனும் கதையில் ஆசிரியர் அழகாக எடுத்துரைத்துள்ளார்.

சிலுவைப்பாடு எனும் சிறுகதையில் சூசையின் மதுப்பழக்கத்தை, **நேற்று ராத்திரி குடித்த கள்ளுப்பயினியின் மிச்ச சொச்சம் இன்னும் அவனிடம் இருந்தது**. (பொம்மை மனிதர்கள், ப.101) என்பதிலருந்து எடுத்துரைத்து அவன் தான் சம்பாதிக்கும் பணத்தை சகட்டுமேனிக்கு செலவு செய்து கள் அருந்திதால் அவன் குடும்பம் வறுமைால் வாடுவதாக ஆசிரியர் கூறியுள்ளார்.

மது என்றும் மனிதனைக் காக்காது. அவனை அழிக்கவே செய்யும் என்பதை கண்ணதாசன் அழகாக தமது அர்த்தமுள்ள இந்துமதத்தில் கூறியுள்ளார். அது,

> **“குடித்தால் உன் உடம்பு கெடும். மலத்துக்கும், சோற்றுக்கும் வித்தியாசம் தெரியாது. காரணம் இல்லாமல் வீண் பகைகளைக் கொண்டுவந்து சேர்க்கும். நீ என்ன சொன்னாலும் உலகம் உன்னை நம்பாது. நீ நிதானமாகப் பேசினாலும் கூட, `இது குடிகாரன் பேச்சு’ என்று தள்ளிவிடும். நீ குடிக்கும் மது, உன் குடும்பத்தின் வாழ்வைக் குடித்துவிடும். உன் வருமானம்**

**பாழாகும். செய்ய வேண்டிய காரியத்தைச் செய்ய வேண்டிய காலத்தில் செய்ய முடியாது. மதுவினால் நீ நோயுற்றால், உனக்காக யாரும் வருத்தப்பட மாட்டார்கள். குடும்பத்தாலும் சமுதாயத்தாலும் ஒதுக்கப்பட்ட புல்லாக, பூச்சியாக நீ மாறிவிடுவாய். நற்குலப் பெண்கள் உன் அருகில் வரவே பயப்படுவார்கள். மொத்தத்தில் நீ மனிதனாகவே வாழ முடியாது" (கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம், ப.126)**

என்பதாகும். இப்படியாக பலரும் கூறிய போதும் சமூகம்தான் திருந்தியபாடில்லை. அரசும் திருந்த விடுவதாய் தெரியவில்லை.

மதுவைப் போலவே இந்த பீடி பழக்கமும் சமூகத்தை சிதைத்து வருகின்றது. இதனை வைரமுத்து,

**சிகரெட் பெட்டிகள்**
**சின்னச் சின்னச் சவப்பெட்டிகள்**
**மரணம் அவற்றுள்**
**உறங்கி வசிக்கிறது. (வைரமுத்து கவிதைகள், ப.269)**

என்கிறார். அழுக்குத்துணி எனும் கதையில், பொன்னையா, **டீயை ஒரு வாயும் பீடியை ஒரு இழுப்புமாய் இழுத்து உடம்புக்குக் கதகதப்பை ஏற்றிக்கொண்டான்.** (பொம்மை மனிதர்கள், ப.73) என்றும், சிலுவைப்பாடு கதையில் சூசை, **எழுந்த வேகத்தில் ஓலைப்பாயின் கீழே கையைவிட்டு சுருட்டையும் தீப்பெட்டியையும் எடுத்துப் பற்ற வைத்தபடி வெளியே வந்தான்**. (பொம்மை மனிதர்கள், ப.102) என்றும் கூறியுள்ள ஆசிரியர் வறுமையில் உள்ளோர் தன் பசியை மரப்பதற்காக இதை செய்வதுபோல் காட்டியுள்ளார். இருப்பினும் இது உயிரைக் கொள்ளும் பழக்கம் என்பதில் சற்றும் மாற்று கருத்து இல்லை. இதிலிருந்து சமூகம் விடுபட வேண்டும் என்பதே நமது விருப்பம்.

**உறவுகளால் கணவன் மனைவி உறவுச்சிக்கல்**

கணவன் மனைவி உறவுச் சிக்கலுக்கு மூல காரணமே மூன்றாம் நபர்தான் என்பதை, **கணவன் மனைவி என்று வாழும் வாழ்க்கையில் ஆசிரியரும் வெளியார்தான். பெற்ற தாய் தந்தையரும் வெளியார்தான். பிறந்த குழந்தைகளுகளும் வளர்ந்து தேறிய பின் வெளியார்தான். (கள்ளோ? காவியமோ?, ப. 151)** என்று மு.வ. கூறியுள்ளார். அதனால் வெளியாட்கள் கணவன் மனைவி உறவில் தலையிடக் கூடாது என்பது தெளிவு.

ஒரு பெண் எப்படி வாழவேண்டும் என்பதை, **சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட குணநலன்களோடு வளர்வதுமான் ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பு; இல்லையென்றால் ஆபத்துதான் என்ற உணர்வு சமூகத்தில் பரப்பப்பட்டிருக்கிறது. அமைதி, உழைப்பு, பணிவு, நன்னடத்தை எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் முனைப்பு அற்ற தன்மை உடையவளாகப் பெண் விளங்க வேண்டும் என்று மட்டுமே சமூகம் எதிர்பார்க்கிறது.** (பெண் – மொழி – படைப்பு, ப. 29) என்று பஞ்சாங்கம் கூறியுள்ளார்.

மஞ்சள்கோடு எனும் கதையில், **"ஒரு மஞ்சப் புடவையை எடுத்துக் கையில வைச்சுக்கிட்டு 'நல்லா இருக்கா… நல்லா இருக்கா…'ன்னு கேட்டான். அதோட விட்டுட வேண்டியதுதானே. நம்ம**

**பிலோமினாவுக்க தோள்ல குறுக்காகப் போட்டுக்கிட்டு உனக்கு அம்சமா இருக்கும்னு சொல்றான். அவன் என்னைப் பார்க்கல்லை… எனக்குச் சீ…ன்னு ஆகிப் போச்சு..” பீட்டரின் நெற்றி சுருங்கியது. ”மக்ளே… நீ தப்பா நினைச்சுக்கப்புடாது… பிலோமினாகிட்ட கொஞ்சம் சொல்லிவை…” என்ற மோசஸ் தொடர்ந்து எதை எதையோ சொல்லிக் கொண்டிருந்தார். அவை எதுவும் பீட்டரின் காதுகளில் எட்டவில்லை.** (பொம்மை மனிதர்கள், ப.129) கணவனிடம் மனைவியைப் பற்றி அவன் சொந்தகாரனே தவறாகக் கூறுவது அவர்களின் உறவில் விரிசலை ஏற்படுத்த முயல்வதாகும். இதனை ஆசிரியர் உறவுகளை நம்ப வேண்டாம் என்று அழகாக எடுத்துரைத்துள்ளார்.

**சந்தேகம்**

இன்றைய கணினி யுகத்தில் ஆண் பெண் சேர்ந்து பழகுவதும் வேலை பார்ப்பதும் இயல்பான ஒன்று அதை தவறாகப் புரிந்துக் கொள்ளாமல் இருந்தாலே அவர்களின் வாழ்க்கை சிறப்பாக இருக்கும். தவறான புரிதல்களே அத்துனை தவறுகளுக்கும் அடிப்படை. இதனை, **பொது இடங்களில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பு உருவாகியதால் சாதி மதங்களைக் கடந்து பழகும் வாய்ப்பு உருவானது. அதன் விளையாக அங்கொன்றும் இங்கொன்றுமாகவேனும் காதல் மணங்கள் கலப்பு மணங்கள் நடைபெறும் சூழலும் உருவானது. பெண் திருமணமான பிறகு சம்பாதிக்க முடியாத சூழல் நிலவிய குடும்பங்களில் ஆண்கள் மட்டுமே சம்பாதிப்பவர்கள் அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டுப் பெண்கள் குடும்பம் நடத்த வேண்டும் என்பதான குடும்ப அமைப்பு ஏற்பட்டது (பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள், ப. 49)** என்று புதுவைஞானகுமாரன் கூறியுள்ளார்.

மஞ்சள்கோடு எனும் கதையில், **பிலோமினா வந்து பத்து நிமிடம் கூட ஆகவில்லை. அதற்குள் ஜோன்ஸ் வந்து விட்டான். அப்படி என்றால் இருவரும் ஒன்றாகத்தான் வந்திருப்பார்களோ. என்னை ஏமாற்றுவதற்காகக் கொஞ்சம் முன்னால் வந்தது போல் பிலோமினாகாட்டிக் கொண்டாளா?**. (பொம்மை மனிதர்கள், ப.133) என்ற சந்தேகம் பீட்டரிடம் ஏற்பட்டதே அவன் நிம்மதி இழப்பிற்கு காரணமாகிவிடுகின்றது.

**தெளிவு**

பீட்டரின் சந்தேகத் தீர்க்கும் விதமாக வீட்டிற்கு வந்த ஜோன்ஸ், **‘வர்றேன் அக்கா..’ என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான் ஜோன்ஸ். பீட்டரின் தலைக்குள் ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸின் ஓட்டம் அடங்கியது. அவன் தலைவலி பறந்ததுபோல் இருந்தது. வயிறும் பசிக்கத் தொடங்கியது. இனி யார் சொல்வதைப் பற்றியும் பீட்டர் கவலைப்படப் போவதில்லை. பிலோமினாவின்மேல் எப்போதும் அவனுக்குச் சந்தேகம் வராது.** (பொம்மை மனிதர்கள், ப.136) என்பதில் பீட்டரின் சந்தே புத்தியால் அவன் மனமும் உடலும் அடைந்த வேதனையை இக்கதை அழகாக தெளிவுபடுத்தி நமக்கு சந்தேகம் வரக்கூடாது என்பதையும் எடுத்துரைக்கின்றது.

**சந்தேகம் எனும் நோய்**

சந்தேகம் என்பதற்கு யாரும் விதிவிலக்கல்ல. இதனை, **பெண்கள் மட்டும் சந்தேகம் இல்லாதவர்களா? தன் கணவர் இன்னொரு பெண்ணுடன் வேறு எந்தக் காரணத்திற்காகப் பழகினாலும் மனைவிக்குச் சந்தேகம் ஏற்படாதா? (அகல்விளக்கு, ப.219)** என்பதிலிருந்து தெரிகின்றது. இனி பீட்டர் சந்தேகப்படமாட்டான் என்பதை, **ஒரு முறை மஞ்சள் கோட்டைத்தாண்டி ஓவர்டேக் பண்ணியதால் வேலை போனது – காலும் போனது. மீண்டும் ஒரு முறை வாழ்க்கை என்ற பஸ்ஸில் இல்லறம் என்னும் சாலையின் மஞ்சள் கோட்டைத் தாண்டி வாழ்வின் சுகங்களை இழக்க அவன் விரும்பவில்லை. (பொம்மை மனிதர்கள், ப.136)** என்பதிலிருந்து அறிய முடிகின்றது. மனிதனின் மிக மோசமான நோய் சந்தேகம். அதை விட்டொழித்தால் அவன் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்பது இக்கதையின் வழி புலப்படுகின்றது.

**முடிவுரை**

ஒரு மனிதன் தன் வாழ்வில் சந்திக்கும் சிக்கல்கள் அவனை மெருகேற்ற கூடியவைகளாக அமைகின்றன. அவ்வாறானவற்றை இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. கல்வியின் தேவை, கல்வி என்பது ஏற்றததாழ்வையும் தாழ்வு மனப்பான்மையும் உருவாக்குவதல்ல என்பதை எடுத்துரைக்கின்றது. ஏழைவீட்டு திருமணத்தில் ஏற்படும் சிக்கல்கள் வரதட்சணையால் ஏற்படும் வறுமை. சந்தேகத்தல் உண்டாகும் சிக்கல்கள் ஆகியவற்றை இக்கட்டுரை பொம்மை மனிதர்கள் எனும் சிறுகதை தொகுப்பைக் கொண்டு ஆராய்ந்துள்ளது. இதன்வழி அனைவரும் ஆண் பெண் பேதமின்றி கல்வி கற்க வேண்டும். திருமணத்தில் வரதட்சணை கூடாது. மது, புகை பழக்கம் கூடாது. கணவன் மனைவியிடையே மூன்றாம் நபர் தலையீடே அவர்களின் சந்தேகத்திற்கும் பிரிவிற்கும் அடிப்படையாகின்றது. எனவே அவர்களின் பேச்சை கேட்கக் கூடாது போன்றவை இதிலிருந்து நம்மால் அறிந்துக் கொள்ள முடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

1. இராகவன். அ, பெண்ணுரிமையும் மதமும், திராவிடர் கழக வெளியீடு, சென்னை, 2001.
2. கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம், கண்ணதாசன் பதிப்பகம், 2019.
3. சுந்தர சண்முகனார் (உரை), நாலடியார், கௌரா பதிப்பகம், சென்னை, 2021.
4. திவ்யபாரதி, ர. “அறஇலக்கியத்தில் இல்லற மதிப்புகள்.” *பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்,* Vol.3, Iss.1, May 2023, ISSN:2583715X, DOI:10.5281/zenodo.7997879.
5. பஞ்சாங்கம், க. *பெண் – மொழி – படைப்பு.* காவ்யா, சென்னை, 2007.
6. பாரதிதாசன், குடும்ப விளக்கு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2002.
7. பிரேமா, இரா. *பெண் விடுதலையும் பெண்ணுரிமையும்.* அறிவுப் பதிப்பகம், சென்னை, 2008.
8. புதுவை ஞானகுமாரன். *பெண்ணிய நோக்கில் மேலாண்மை பொன்னுச்சாமியின் புதினங்கள்.* சிந்தனை பதிப்பகம், புதுச்சேரி, 2007.
9. புலியூர்கேசிகன் (பதி.), திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1986.

KALANJIYAM

10. பொன்மணி வைரமுத்து, வைரமுத்து கவிதைகள், சூர்யா வெளியீடு, சென்னை, 2002.
11. முகிலை இராசபாண்டியன், பொம்மை மனிதர்கள், கோவன் பதிப்பகம், சென்னை, 2007.
12. வரதராசன், மு. *அகல்விளக்கு.* பாரி நிலையம், சென்னை, 1995.
13. வரதராசன், மு. *கள்ளோ? காவியமோ?.* பாரி நிலையம், சென்னை, 1995.


நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி / Author Contribution Statement: இல்லை/NIL
கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement: இல்லை/NIL
கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன் I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.

KALANJIYAM